# AKILA PRESS RELEASE

# 2021-2022

தினமணி

புதன்கிழமை, 27 ஏப்ரல் 2022

# நாட்டு நலப் பணித் திட்ட முகாம் தொடக்கம்

**வந்தவாசி**, ஏப். 26: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் சிறப்பு முகாம் தென்கரை கிராமத்தில் திங்கள்கிழமை தொடங்கியது.

அங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் சி.ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் ஏ.கலைவாணி வரவேற்றார். தெள்ளார் வட்டாரக் கல்வி அலுவலர் தே.ரங்கநாதன் முகாமைத் தொடக்கிவைத்தார்.

வட்டார வள மைய மேற்பார்வையாளர் டி.ஜெயசீலன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஆர். மோகனன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முகாமில் ஊராட்சி மன்றத் தலைவர் கீதா வெங்கடேசன், துணைத் தலைவர் எஸ்.பத்மா, பள்ளித் தலைமை ஆசிரியை டி. வளர்மதி, வருவாய் ஆய்வாளர் என். சுதா, கிராம நிர்வாக அலுவலர் எ.குப்பன், ஊராட்சிச் செயலர் பி.வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் த.பாரதி நன்றி தெரிவித்தார்.

7 தினங்கள் நடைபெறும் இந்த முகாமின் தொடக்க நாளான திங்கள்கிழமை கோயில் வளாகம், பள்ளி வளாகம் ஆகியவற்றை தூய்மை செய்யும் பணியை நாட்டு நலப் பணித் திட்ட மாணவிகள் மேற்கொண்டனர்.



நாட்டு நலப் பணித் திட்ட முகாமை தொடக்கி வைத்துப் பேசுகிறார் தெள்ளார் வட்டாரக் கல்வி அலுவலர் தே.ரங்கநாதன்.

தினமணி 07/3/22 மகளிர் தின விழா.

# கல்லூரியில் மகளிர் தின விழா

**வந்தவாசி, மார்ச் 6:** வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, புதுதில்லி விஷ்வ யுவகேந்திரா ஆகியவை சார்பில் உலக மகளிர் தின விழா சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் சி.ருக்மணி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேராசிரியை எம்.கே.வடிவழகி வரவேற்றார்.

வேளாண் துறையில் சாதனைப் பெண்கள் என்ற தலைப்பில் கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத் தலைவர் வி.சுரேஷ், தொழில்நுட்ப வல்லுநர் டி.மார்கரெட் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் வளாக நேர்காணலில் தேர்வு பெற்ற கல்லூரி மாணவிகளுக்கு பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டன. பேராசிரியை எ.ஷோபா நன்றி கூறினார்.

தினமணி 7/3/2022

தினகரன் 07/03/22 மகளிர் தின விழா

தினகரன் 07/3/2022

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# உலக மகளிர் தின விழா



▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிக்கு தனியார் கம்பெனியில் வேலை செய்வதற்கான பணி நியமன ஆணையை மூத்த ஆராய்ச்சியாளர் வி.சுரேஷ் வழங்கினார். உடன் கல்லூரி முதல்வர் சி.ருக்குமணி, செயலாளர் எம்.ரமணன்.

வந்தவாசி, மார்ச் 7: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழாவையொட்டி நடந்த நிகழ்ச்சியில் தனியார் கம்பெனியில் வேலை செய்வதற்கான உத்தரவை மூத்த ஆராய்ச்சியாளர் வி.சுரேஷ் வழங்கினார்.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழா நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் சி.ருக்குமணி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயிர் வேதியல் துறை பேராசிரியை கே.வடிவழகி வரவேற்றார்.

இதில் தி,மலையில் இயங்கும் மத்திய அரசின் ஆராய்ச்சி மையத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் வி. சுரேஷ், தொழில் நுட்பவல்லுனர் டி.மார்கரேட் ஆகியோர் கலந்து கொண்டு வேளாண் துறையில் சாதனை பெண்கள் மற்றும் அத்துறையில் பெண்களின் பங்கு குறித்து விளக்கிப் பேசினர். மேலும் கல்லூரி வேலை வாய்ப்பு வழிகாட்டி துறை மூலம் பயிற்சி பெற்று தனியார் கம்பெனியில் வேலைக்கு செல்வதற்கான பணிநியமன உத்திரவை வழங்கினார். முடிவில் வேதியல் துறைதலைவர் ஏ.சோபா நன்றி கூறினார்.

தினமலர் வேலூர் புதன் ஏப்ரல் 27, 2022

# அகிலாண்டேஸ்வரி கல்லூரி என்எஸ்எஸ் சிறப்பு முகாம்

வந்தவாசி, ஏப். 27–

தெள்ளார் யூனியனுக்கு உட்பட்ட தென்கரை, பெரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் உள்ள யூனியன் தொடக்கப்பள்ளிகளில், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நடத்தினர்.

முகாமுக்கு, கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலாளர் ரமணன் முன்னிலை வகித்தார். முதல்வர் ருக்மணி வரவேற்றார்.

என்எஸ்எஸ் அலுவலர் கலைவாணி முன்னிலையில் முகாம் தொடங்கியது. தென்கரை மற்றும் பெரும்பாக்கம் யூனியன் தொடக்கப்பள்ளிகளின் வளாகத்தில் மாணவிகள் தூய்மைப்பணியில் ஈடுபட்டனர்.

இதில், தெள்ளார் வட்டார கல்வி அலுவலர் ரங்கநாதன், வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஜெயசீலன், நல்லாசிரியர் விருதுபெற்ற தலைமை ஆசிரியர் (ஓய்வு) மோகன், வருவாய் ஆய்வாளர் சுதா, விஏஓ குப்பன், தென்கரை பஞ். தலைவர் கீதா, துணைத்தலைவர் பத்மா, தென்கரை பள்ளி தலைமைஆசிரியை வளர்மதி, பெரும்பாக்கம் பள்ளி தலைமைஆசிரியர் ஸ்ரீதர், பஞ். செயலாளர் வெங்கடேசன், வார்டு உறுப்பினர்கள், என்எஸ்எஸ் அலுவலர் பாரதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

